ப. பரமேஸ்வரன்

# விநாடி- வினா



அருணகிரிநாதர் 15-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் அருளிய திருப்புகழ், வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், வகுப்புகள், கந்தரநுபூதி, கந்தரலங்காரம், கந்தரந்தாதி போன்ற நூல்களிலிருந்து இங்கு இந்தக் கேள்விகளை அமைத்திருக்கிறோம்.

## 1. பாடல் முடிவுறும் சொற்கள்:

1. 'பெருமாளே' என்றே தமது திருப்புகழ் பாடல்களை முடித்த அருணகிரிநாதர், வேறு ஒரு சொல்லையும் ஒரு சில பாடல்களின் இறுதியில் கையாண்டிருக்கிறார். அது என்ன?

2. விநாயகரைத் துதி செய்து அருளிய ஐந்து புகழ் பாக்களில் ஒன்றில் மட்டும் வித்தியாசமான இறுதிச் சொல்லை உபயோகித்துள்ளார். அந்தப் பாடலையும் அதன் முடிவுச் சொல்லையும் கூறுக.

## 2. ஆறுகளும் அதைச் சேர்ந்த இடங்களும்:

1. 'வயிரவி வனத்தில் மேவு பெருமாளே' என்று அருணகிரிநாதர் கூறும் இடம் எந்த ஆற்றங்கரையில் உள்ளது?

2. 'கம்பையாற்றினில்...' என்று அருணகிரிநாதர் ஒரு பாடலில் கூறுகிறார். அது எங்கே இருக்கிறது?

## 3. முக்கியமான சொற்கள்:

1. முருகனை 'தட்சிணாமூர்த்தி' என்று அருணகிரிநாதர் ஒரு திருப்புகழில் குறிப்பிடுகிறார். அது எந்தப் பாடல்?

2. 'ஆறுமுகனே மாங்கல்ய பலம் தந்து காப்பவன்' என்ற பொருள் அமைந்த பாடல் எது?

## 4. இந்த க்ஷேத்திரங்களின் தற்காலப் பெயர் என்ன?

1. 'தென்கயிலாயம்' என்று அருணகிரிநாதர் குறிப்பிடும் ஊர் எது?

2. 'வடசிற்றம்பலம்' என்று அருணகிரிநாதர் அழைத்த ஊர் எது?

3. சிதம்பரத்தைத் தமது பாடல்களில் கனகசபை, கனகம்பலம், செம்பொன்னம்பலம், திருச்சிற்றம்பலம், தில்லைநகர் என்றெல்லாம் அருணகிரிநாதர் அழைத்திருக்கிறார். இவை தவிர மேலும் ஒரு சொல்லை அவர் சில பாடல்களில் உபயோகித்திருக்கிறார். அது என்ன?

**பதில்கள் தலைகீழாக இருக்கின்றன.**



[1.] 1. 'தம்பிரானே' என்றும் முடித்துள்ளார்.
2. 'விடமடைக' என்ற பாடலில் 'ஆனைமுகவோனே' என்று முடித்திருக்கிறார்.

[2.] 1. சரஸ்வதி நதிக்கரையில் இருக்கிறது.
2. காஞ்சியில்.

[3.] 1. 'பெரிய மடம்' பாடல் ஒன்றில் 'விரத தட்சிணாமூர்த்தியே' என்று அழைத்திருக்கிறார்.
2. கந்தரலங்காரம் ஒன்றில் 'சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரண' என்று வருகிறது.

[4.] 1. பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான காளஹஸ்தி.
2. தற்காலத்தில் 'மதுராந்தகம்' ஆகும். 3. புலியூர்.

விடைகள்:

[1.] 1. 'தம்பிரானே' என்றும் முடித்துள்ளார்.
2. 'விடமடைக' என்ற பாடலில் 'ஆனைமுகவோனே' என்று முடித்திருக்கிறார்.

[2.] 1. சரஸ்வதி நதிக்கரையில் இருக்கிறது.
2. காஞ்சியில்.

[3.] 1. 'பெரிய மடம்' பாடல் ஒன்றில் 'விரத தட்சிணாமூர்த்தியே' என்று அழைத்திருக்கிறார்.
2. கந்தரலங்காரம் ஒன்றில் 'சசிதேவி மங்கல்ய தந்து ரக்ஷாபரண' என்று வருகிறது.

[4.] 1. பஞ்சபூத ஸ்தலங்களில் ஒன்றான காளஹஸ்தி.
2. தற்காலத்தில் 'மதுராந்தகம்' ஆகும். 3. புலியூர்.